
நேஷனல் புரடக்ஷன்ஸ்
உலகம் பலவிதம்
BALAN

# உலகம் பலவிதம்

## நடிகர்கள்

1. சிவாஜி கணேசன்
2. P. S. வீரப்பா
3. V. K. ராமசாமி
4. T. K. ராமச்சந்திரன்
5. K. A. தங்கவேலு
6. T. V. ராதா் கிருஷ்ணன்
7. M. R. சந்தானம்
8. S. V. ஷண்முகம்
9. M. A. கணபதி

## நடிகைகள்

1. லலிதா
2. M. லக்ஷ்மிப்ரபா
3. M. N. ராஜம்
4. M. சரோஜா
5. C. K. சரஸ்வதி
6. பேபி T. R. ராஜகுமாரி

# உலகம் பலவிதம்

| | | |
|---|---|---|
| தயாரிப்பு | ... | நேஷனல் புரொடக்ஷன்ஸ் |
| திரைக்கதை & சீனேரியோ | ... | T. R. ரகுநாத் |
| வசனம் | ... | வி. என். சம்பந்தம் |
| பாடல்கள் | ... | தஞ்சை ராமையாதாஸ்<br>K. P. காமாக்ஷி சுந்தரம்<br>A. மருதகாசி |
| சங்கீதம் | ... | N. S. பாலகிருஷ்ணன் |
| ஒளிப்பதிவு | ... | G. விட்டல், குமாரதேவன் |
| ஒலிப்பதிவு | ... | M. லோகநாதன் |
| மேக்கப் | ... | D. தனக்கோடி |
| உடை | ... | A. ராமசாமி, A. அங்குசாமி |
| ஆர்ட் | ... | S. அம்மையப்பன் |
| செட்டிங் | ... | செல்லம், பாபு |
| லேபரட்ரி | ... | எத்திராஜ் |
| எடிட்டிங் | ... | S. A. முருகேஷ்<br>M. ராமகிருஷ்ணன் |
| உதவி டைரக்ஷன் | ... | M. ராமகிருஷ்ணன்<br>P. மாதவன் |
| நடனம் | ... | P. S. கோபாலகிருஷ்ணன்<br>சோகன்லால் & ஹீராலால் |
| ஸ்டுடியோ | ... | நியூடோன் |
| டைரக்ஷன் | ... | S. A. முருகேஷ் |

பின்னணி

M. L. வசந்தகுமாரி, P. லீலா, கான்சரஸ்வதி, ரத்தினமாலா, ராணி, கஸ்தூரி, பகவதி பேபி T. R. ராஜகுமாரி, T. M. சௌந்தரராஜன், புதுவை லோகநாதன்.

# உலகம் பலவிதம்

## திரைக் கதை

---

உலகம் பலவிதம்! ஆம்! உலகம் பலவிதம் தான்! இதை யாருமே மறுக்க முடியாது! உலகத்தில் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான சம்பவங்கள் நடைபெறு கின்றன. அவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்து உருவாக்கு வது என்பது யாராலும் முடியாத ஒன்று. உலகம் பல விதம் என்ற அடிப்படையில், ஒருசில சம்பவங்களைக் கொண்டு ஓரளவு நிரூபிக்க வந்ததுதான் இந்த உலகம் பலவிதம் !

அருணகிரி, கண்யமான ஒரு காலேஜ் மாணவன் அவனுடைய ஆருயிர் நண்பர்கள் கழுகு, பச்சை இரு வரும். மூவரும் ஒரே கல்லூரியில் படிப்பவர்கள். அதே கல்லூரியில் வாசிக்கும் இந்திரா, கிரியின் மனதைக் கவர்ந்து விடுகிருள். அதேபோல, பச்சையும், அவ்வூர் பல்கலைப் புலவர் பஞ்சவர்ண முதலியாரின் மகள் நீலத்தைக் காதலிக்கிருன். ஆனல், நீலம் சாதாரணமாக சம்மதிக்கவில்லை. ஆகவே, தன் நண்பனை கிரியின் உதவியை நாடுகிருன். இதனிடையில், அவர்களுடைய காதலில் குறுக்கிட்டு, கலங்கச் செய்கிருன் கழுகு. ஆதலால், பச்சையின் காதல் வேகம் அதிகரித்து விடு கிறது. நீலத்தை மணக்க நீண்ட நாள் முயற்சி செய் கிருன். ஆனல், தன் மாமன் "ஆட்டம் பாம்"—அமிர்த லிங்க முதலியாரின் உத்தரவும் தேவை. அதற்காக அவருடைய மனதை மாற்றுவதற்காக—'மரகதவல்லி'

எழுதிய சில நாவல்களை அவருக்குப் படித்துக் காண்பிக்கிறான். அவைகளைக் கேட்டு பழமையிலிருந்து புதுமை உலகிற்கு மாறிவிடுகிறார் அமிர்தலிங்கம். அதன் பலனாக, தன்வீட்டு சமையல்காரி தமயந்தியை கல்யாணம் செய்து கொள்கிறார். ஆனால், பச்சை ஏமாந்து விடுகிறான். இது இவ்வாறிருக்க,

அருணகிரி, சென்னையில் வசித்தாலும், அவனது பூர்வீகம் சிங்கப்பூர். தன் தந்தை அனுப்பும் பணத்தைக் கொண்டு படித்து வருகிறான். திடீரென்று பணம் நின்று விடுகிறது. காரணம்......

சிங்கப்பூரில் இருந்த சதாசிவ முதலியாரிடம் (அருணகிரியின் தந்தை) அங்கு சென்ற நாடக கோஷ்டி ஒன்று அதாவது ராஜபார்ட்—ராமலிங்கம், மனைவி செல்லம் அவள் தங்கை சிறுமி இந்திரா மூவரும் அடைக்கலம் புகுந்து; முதலியாரின் ஆதரவில் வேலை செய்து ஜீவித்து வருகின்றனர்.

ஒருநாள் சதாசிவ முதலியாரைக் கொலை செய்து விட்டு, குழந்தை இந்திராவையும், முதலியாரின் நகைகளையும் எடுத்துக் கொண்டு இந்தியாவுக்கு வந்து "கொடை வள்ளல் குமரப்பா" என்ற பெயரில் காலம் கடத்தி வருகிறான் ராஜபார்ட்—ராமலிங்கம்.

சிங்கப்பூரில் அனாதையாக விடப்பட்ட செல்லம் பலவிதமாக கஷ்டப்பட்டு சென்னையிலிருக்கும் அருணகிரியைக் கண்டுபிடித்து, அடைக்கலம் புகுகின்றாள். கிரியும் ஆதரித்து அன்போடு வைத்திருக்கின்றான்.

வருஷங்கள் சில மறைந்தன.

இந்திரா, சென்னை கல்லூரியில் கிரியுடன் வாசித்துக் கொண்டிருக்கிருள். இருவருக்கும் மனம் ஒன்று படுகிறது. கல்லூரி பரீக்ஷை முடிந்து, இந்திரா தன் ஊருக்குப் போய் விடுகிருள். கொடை வள்ளல் குமரப்பாவுக்கு அன் யோன்ய நண்பரான, பல்கலைப் புலவர் பஞ்சவர்ணம், விடு முறைக்காக குமரப்பா வீட்டுக்கு தன் மகள் நீலத்துடன் வந்து தங்குகிருர்.

இந்த நிலையில், அருணகிரி, கழுகு, பச்சை இந்த மூவரும் அங்கு வருகின்றனர். ஆனல், இந்திராவின் காதலன் கிரி. ஆனல், இந்திரா இருப்பது, கொடை வள்ளல் குமரப்பா வீட்டில். அவனே, கிரியின் தந்தையைக் கொலை செய்து ஓடிவந்த பாதகன்! இந்த சூழ் நிலையில், இந்திராவும், கிரியும் தம்பதிகளாக மாறுவது எப்படி...? பச்சை, நீலத்தை மணப்பது எப்படி...? செல்லமும், குமரப்பாவும் சந்தித்தார்களா...? என்ற விவரங்களை யெல்லாம், வெள்ளித்திரை சொல்லும்...!

1. பாட்டு: கே. பி. காமாக்ஷி சுந்தரன்

இந்திரா: வாழ்க்கை ஓடம், ஓடவும் வேணும்
சென்று கரை சேர வேணும்—இன்பம்
கண்டு கரை சேர வேணும்...வாழ்
சேர்க்கையினால் வரும், இன்ப துன்ப
அலைகள்
சேர்ந்தே மோதிடுமே...

கிரி: அதை
பார்த்து பார்த்து துடுப்பை
மாறி மாறி போட்டு வழி
பார்ப்பதுவே இன்பந்தானே... (வாழ்க்கை)

இந்திரா: வசந்தகால தென்றலைப்போல் வந்தாய்—என்
வயதுக் கினிய இன்பமே நீ தந்தாய்

கிரி: இசைந்த வயதில் நீயும் நானும
ஒன்ருய்—இனி
இணைந்து வாழ இன்பக் கரையை
காண்போம (வாழ்க்கை)

2. பாட்டு: தஞ்சை ராமையாதாஸ்

பிரகலாதன்: அன்னையும் பிதாவும், முன்னறி தெய்வம்
ஆனாலும் உலகிலே, ஹரியே என்
தெயவம்
ஆபத்பாந்தவா அனாத ரக்ஷகா
நாராயணா, ஹரி ஓம் நாராயணா

இரணியன்: படு சுட்டி, சுத்த படு சுட்டி...இவன்
இன்றோடு அழியட்டும் மடமட்டி...அந்த
மடமட்டி எனைக்கிட்டி, மார் தட்டி
ஹரி என்று
கொடி கட்டிப் பறந்தாலும்
கொல்லுவேனே வெட்டி படு சுட்டி

வீலாவதி : கல்லான உங்கள் மனம்
கரையாதோ சுவாமி...
கடுந்தவம் செய்தே பெற்ற
கண்ணல்லவோ சுவாமி...

இரணியன் : மதிகெட்டு நிலைகெட்டு மனங்கெட்டு
பேசாதே...
உடல் விட்டு ஒழியட்டும்
விட மட்டுக் கொல்வாயே
மடியட்டும்...இவன் மடியட்டும்...

லீலாவதி : பெற்றதாய் வயிர் பற்றி வேகுதே...
பிள்ளையைக் கொல்லக் காலமா...
பேதையாள் மனம் வேதையாகுதே
பிரம்மனே உந்தன் கோபமா...
பாலை ஊட்டியே வளர்த்த பாவியே
காலனுவது ஞாயமா...
பத்து மாதம் சுமந்ததால் செய்த
பாபமா இது சாபமா...

இரணியன் : மனத்தால் நினைத்தால் பஜித்தால்
உனைத்தான்
உதைத்தே மடித்தேகுவேன்...
எனைத்தான் இனித்தான் மதித்தே
நினைத்தால்
உனைத்தான் விடுத்தேகுவேன்...
சினத்தால் ஹரித்தான் பகைத்தே
எதிர்த்தே
துடித்தால் பிடித்தே இனி...
சினத்தே வதைத்தே மிதித்தே
கிழித்தே
சரித்தே மடித்தேகுவேன்...

3. பாட்டு : ராமையாதாஸ்

ஓ...ஹோ......
ஓ ஹோ...
வேஷம் போடுதே...உலகம்
மோச மானதே
நேசமாகப் பேசி வலை வீசி
வேஷம் போடுதே இவ்வுலகம் மோசமானதே

பதவி மோகத்தினுலே உலகம்
பகட்டு காட்டுதே
பாரி வள்ளல் போல பேசி
பெட்டியை பூட்டுதே
பீ...டிட்டிபீ...டிட்டிபீ...டிட்டிட்டிபீ

மடமையான பழமையினுலே
மதியிழந்ததே இவ்வுலகம்
மருந்தில்லா துப்பாக்கியாலே
ஆளை விரட்டுதே...இவ்வுலகம்...
கடமை யென்று பேசி பேசி
காசைப் பறிக்குதே இவ்வுலகம்
கபடமான சூழ்ச்சியாலே
காலம் ஓடுதே...

வேஷம் போடுதே...உலகம்...
மோச மானதே

நேசமாகப் பேசி வலை வீசி
வேஷம் போடுதே...இவ்வுலகம்
மோசமானதே...

4. நாடக மேடை பாட்டு: ராமையாதாஸ்

இந்திரா :- பல்லவி

தெய்வமே இல்லையே—உலகில்
தெய்வமே இல்லையே—காதல்
தேவியின் மணம் போலே
தினமும் இன்ப கனவுகாணும்—கணவனைவிட
(தெய்வ)

அநுபல்லவி

வையகமே புகழ் கைபல்யமே—பெண்கள்
வாழ்க்கையின் தீபமே
இதயமதில்—வளருமெந்தன்—பதியைவிட (தெய்வ)

சரணம்

காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம்—என்ற குறள்
வேதமே—காதலர் இல்லற ஜீவிதமே
இன்பம் நிலை—எந்நாளு தருமே—இகமதில்
எனது—மனது—தினமும்—மகிழ—
கணவனைவிட (தெய்வ)

5.

பாட்டு: ராமையாதாஸ்

அடிமை யென்றெண்ணாதே பெண்ணே உலகம்
மடமையினால் உன்னை கொடுமை செய்தாலும்
(அடிமை)

இடங்கொடுத்தால் போதும் வருவார்—பெண்ணே
கல்யாணமாகாத பெண்ணே—தரகர்
இரக்கமே இல்லாமல் விலை பேசிடுவார்

இல்லறத் தாயென்று புகழ்வார்...
எந்நாளும் நம்பாதே பெண் பேதை நீயே (அடிமை)

விலங்கென உனை மதிப்பார்—பெண்ணே தொண்டு
கிழங்களுக்கே துணிந்து பலி கொடுப்பார்...

பழங்கதையே பேசி முடிப்பார்—அந்த
பாவிகள் நினைத்தாலே பகுத்தறிவாலே (அடிமை)

வாழப் பிறந்தவள் நீயே—வருங்
காலத்தின் சுகதுக்கம் உணர்ந்திடுவாயே...
ஆலைக் கரும்பாக உனையே—உன்
அன்னையும் தந்தையும் ஆட்டிவைப்பாரே
(அடிமை)

6. பாட்டு: அ. மருதகாசி

உலகம் பலவிதம்—உலகம்
பலவிதம் என்றே சொல்லுவாங்க...
ஒரு வகையில் இந்த
பங்களாவும் உலகும் ஒண்ணுதாங்க...

தலைவர்கள் தேசத் தொண்டர்
தருமவான் ஈயா லோபி
கலைஞர்கள் கவிஞர் எனப் பலரும்
தங்கிப் போவதாலே (பங்களா)

பணம் சேர்க்கக் கொள்கை தன்னை
பலியிடும் கயவர் கூட்டம்
குணங் கெட்ட பெண்ணும் குலமகளும்
வந்து போவதாலே... (பங்களா)

ஓடாத காரில் ஏறும் உல்லாச மைனர் ஸாரும்
நாடாளுவோரும் பல ஸ்டாரும்—இங்கு
காண்பதாலே (பங்களா)

பாட்டாளி வர்க்கம் எங்கள்
கூட்டாளி என்றே பேசி
தேட்டையே போடும் வெத்து வேட்டும்—இங்கு
சேருவதாலே (பங்களா)

சத்தியம் தவறு பக்தர்
சாமியே இல்லை என்போர்
அத்தனை பேரும் தினந்தோறும் வந்து
போவதாலே (பங்களா)

பலவிதம் என்றே சொல்லுவாங்க...
வாங்க...வாங்க...

7. பாட்டு : அ. மருதகாசி

கிரி : ஆசைக் கனவே நீ வா...வா வா...
அழகுச் சிலையே நீ வா...

இந்திரா : பேசுங்கண்ணு நீ வா...வா வா
பிரியா நிழலே நீ வா...

கிரி : அருங்கலை வாணி
ஆடும் ராணி
பாடும் தேனி

இந்திரா : அழகிய சுகுமாரன் நீ

கிரி : நறுமணம் வீசும் எழில் மிகு ரோஜா

இந்திரா : நயமொழி பேசும் ராஜா... (ஆசைக் கனவே)

நீலம் : வெட்கமே இல்லையா,
வீண் வம்பு ஏனையா
விளையாட நேரங்காலம் இல்லையா...
அக்கம் பக்கம் யாருங்கண்டால்
அவமானம் இல்லையா...

பச்சை : வெட்கமே ஆகுமா
தர்க்கமும் ஞாயமா
விளையாட நேரங்காலம் வேணுமம்...
அக்கம் பக்கம் யம்ருங்கண்டால்
நமகென்ன நஷ்டமா...

நீலம் : பட்டாடை கெட்டுப் போகும்...எட்டு
பச்சை : கதர் பட்டே என் நெஞ்சைப் பாரு தொட்டு

நீலம் : ம்.. தொட்டாக்கா சுட்டுப் போடுங் காலம்

பச்சை : என்னை சுட்டாலும் பரவாயில்லை நீலம்...

நீலம் : அக்கம் பக்கம் யாருங்கண்டால்
அவமானம் இல்லையா

பச்சை : அக்கம் பக்கம் யாருங்கண்டால்
நமகென்ன நஷ்டமா...

வள்ளி : ஓரான் ஓரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானும் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்க சொல்லி
காயிதம் போட்டானும் வெள்ளைக்காரன்
வெள்ளைக்காரன் பணம் வெள்ளிப் பணம்
வெள்ளிப் பணம் அது சின்னப் பணம்
வெள்ளி பணத்துக்கு ஆசைப் பட்டு
வேஷங்குலைஞ்சாளே வீராயி...

8.

பாட்டு: கே. பி. காமாக்ஷி சுந்தரன்

ஆண் : உள்ளதை நீ சொல்லாதே......
உலகம் ஒப்புக் கொள்ளாதே......
நல்லதுக்கு காலமில்லே தங்கரத்தினமே......
நாடு சிரிக்குமடி பொன்னு ரத்தினமே......
(உள்ளதை)

பெண் : நல்லவரர் பேரெடுக்க நாளு ரொம்ப வேணுமடி
மொள்ளமாரித் தனமே செய்தால்
தங்கரத்தினமே......
கொள்ளைலாபம் சேருமடி தங்கரத்தினமே
(உள்ளதை)

ஆண் : பாடு படும் ஏழையெல்லாம்
பட்டினியால் வாடுகிறார்......(ஆமாம்)

பெண் : படிப்பில்லா முட்டாளெல்லாம்
பதவியில் வாழுகிறார்......

ஆண் : நாடறிய சொல்லாதடி... தங்கரத்தினமே......
நம்பவே மாட்டாரடி......

பெண் : கண்ணுக்கு நிகரான பெண்ணுக்கு விடுதலே
காணவேணுமென்று சொல்கிருன்..........
அந்த ஒண்ணுக்கும் உதவாத வெட்டிப்பயல்
பெண்ணே
உதை கொடுத்தே இன்பம் காண்கிருன்......

ஆண் : அதுமட்டுமா......
ஆண்டவன் பேரையே சொல்லுருன்... தன்னே
அண்டின பேரை கெடுக்கிருன்......
வேண்டும் பொருளே குவிக்கிருன்......இதை
வெளியிலே சொன்ஞ நம்மெ திட்டுருன்......
(உள்ளதை)

9.

பாட்டு : கே. பி. காமாக்ஷிசுந்தரம்

கிரி : கடவுள் என்றெருவன் இருந்தால்...அவன் தன்
கடமையை செய்ய வேணும்...அது...
கஷ்டமாயிருந்தால் மனிதனுய்ப் பிறந்து ஓர்
கணமேனும் வாழவேணும்...
கடவுள் என்ற பெயரைச் சொல்லி
விளேயாடுது உலகம்...அந்தக்

10.

பாட்டு : ராமையாதாஸ்

உலகமே உன் சதியால் நானே
அலேயில் மேவும் துரும்பானேனே
உண்மையான வாழ்வை இழந்தேனே
வீணுகுமா......காதல் வீணுகுமா
வாழ் நாளிலே எண்ணம் மாருனதே
வாடாத மலர் மேல் தென்றல் புயலானதே
உண்மையான வாழ்வை இழந்தேனே
வீணுகுமா...காதல் வீணுகுமா... (உலகமே)
அன்பின் வேகம் இதுதாஞ
ஆசையாவும் பொய்தாஞ
பெண் புத்தியாலே வாழ்வில் பேதையும் ஆனேனே
உண்மையான வாழ்வை இழந்தேனே
வீணுகுமா...காதல் வீணுகுமா (உலகம்)

கடவுள் செயல் அறியாமலே
தடுமாறுது உலகம்...
பேய்களை எல்லாம், பெண்ணுக்கி என்னை
நாயாகச் செய்தானடி...ஞான தங்கமே
ஞாயம் இதாகுமோடி
முக்காலமும் உணர்ந்த,
முனிவர்களானாலும்
இக்காலப் பெண்களிடம்—ஞான தங்கமே
ஏமாந்து போவாரடி...
பணக்காரர் என்றே
பகல் வேஷம் கொண்டோர்
குணக்காரர் இல்லையடி—ஞான தங்கமே
கொலை காரர் ஆவாரடி
தன் நலம் பேணும் உலகம்
தன்மையே இல்லா உலகம்
இன்னல் தரும் உலகமடி—ஞான தங்கமே
என்றுதான் திருந்துமோடி (கடவுள் என்ற)

11. பாட்டு : ராமையாதாஸ்

## நாடக மேடை

இந்திரா : உலகம் பலவிதம் ஐயா—இந்த
உலகம் பலவிதம் ஐயா—இதை
உணர்ந்து பாருங்கோ மெய்யா பொய்யா—
(உலகம்)

கலையும் கட்சியும் மலிஞ்சி போச்சிது
காசு பறிக்க அது கருவியாச்சிது
கொலையும் களவும் கூசாமே நடக்குது
குனிஞ்சவன் தலையிலே குல்லாவை போடுது—
(உலகம்)

பற்பல விதமாய் ஊரை ஏய்க்கிது
பச்சோந்தி போலே கலரை மாத்துது
தற் பெருமையாலே தாண்டிக் குதிக்கிது
அற்ப விஷயத்துக்கு அடிதடி நடக்குது—
(உலகம்)

பச்சை : கூந்தலிலே பூவை வச்சி
குலுக்கி மினுக்கி நடப்பதென்ன பங்காரு
அடியே பங்காரு

நீலா : கோவிலுக்குப் போகையிலே
குறுக்கே வந்து நிற்கலாமோ மன்னரு
மாமா மன்னரு

பச்சை : தாட்டுப் பத்திரி பொடவை ஒனக்கு
தந்தவன் யாரு சொல்லடி பங்காரு
அடியே பங்காரு

நீலம் : சிறுவாடு காசு சேத்து
சேட்டுக் கடையில் வாங்கினேனே மன்னரு
மச்சான் மன்னரு

பச்சை : கையிலிருந்த வளையல் ஒடைஞ்ச
காரணம் என்ன

நீலம் : காரணத்தை சொல்ல இப்போ நேரமுமில்லே

பச்சை : நேரமில்லையா்—வாங்கு

நீலம் : ஐயோ அம்மா அப்பா—என்னை
கொல்லாதே கொல்லாதே கொல்லாதே
அத்தை மகனை கட்டிகிட்டு நான்
அவஸ்தை படவும் வாணும்—எங்க
ஆத்தா வூட்டுக்குப் போறேன்—நீயும்
என்னைத் தேட வாணாக

இந்திரா : மெய்யா பொய்யா பாருங்கோ—இதை
உணர்ந்து பாருங்கோ மெய்யா பொய்யா
உலகம் பலவிதம் ஐயா

பொருத்தமாயுள்ள புருஷன் பொஞ்சாதி
பூனையும் எலிப்போல் எகிரிப் பாயுது
அர்த்தமே இல்லாத சந்தேகத்தாலே
ஆணையும் பெண்ணையும் அம்பலமாக்குது—
(உலகம்)

## குடுகுடுப்பைக்காரன்

ஜக்கம்மா ஓடிவா ஜக்கம்மா ஓடிவா
ஓடிவா ஓடிவா ஓடிவா

பொறக்குது
அம்மாவுக்குப் பொறக்குது
நல்ல காலம் பொறக்குது

அய்யாவைப் பிரிஞ்ச மனசு துடிக்கிது இப்போ
அம்மாவுக்கு நல்ல அதிர்ஷ்டம் அடிக்கிது
(பொறக்குது)

**பெண்-** கல்யாணம் செய்த புருஷன் என்னை தேடி
வருவாரா—அவர்
காசு பணமெல்லாம் பொஞ்சாதி கையிலே
தருவாரா

குடுகுடுப்:- அஞ்சி நாளில் உன் புருஷனுக்கு பெரும்
ஆபத்து இருக்குது தெரிஞ்சிக்கோ

**பெண்:-** ஐயோ தெய்வமே
அதற்கு மார்க்கமே இல்லையா

குடுகுடுப்:- இருக்குது
காளி கோவில் சென்று கண்ணை மூடிக்
தாலி பிச்சை கேள் தாயே [கொண்டு

பெண்:- அப்போ, கண்டம் விலகுமா

குடுகுடுப்:- ஆமா கண்டம் விலகுது—உன்
கவலை ஒழியுது—உன்
கஷ்ட காலம் நீங்கி உந்தன்
இஷ்டம் போல வாழ நல்ல காலம்
(பொறக்குது)

**குறத்தி:-** ஏ அம்மா...ஏ ஆயாலோ... ஏ ஐயே...!
ஆசை மனைவியை நம்பாமலிருந்த
அப்பாவி நீயல்லவோ ராஜா
அருமை தெரியாமே அடிச்சி ஒதைச்ச
சிப்பாயி நீ யல்லவோ
தாலிகட்டிய மனைவிக்கி நீ
துரோகம் செய்தாயா—அவ
சாபத்தாலே மரண கண்டம்
தப்பாது ஐயா...

**ஆண்:-** அந்த— சாபந்தீர வழி எனக்கு சொல்லு
வாயம்மா—பரி
தாபமாக கேக்குறேனே பாரு சொக்கம்மா

**குறத்தி:-** கேளுமையா காளியம்மன் கோவில் முன்னாலே
கெஞ்சிப் பாரு பொஞ்சாதி வந்து சேரும்
தன்னாலே

**பூசாரி:-** சாமுண்டி மாரி பிடாரி
மாமுண்டி மயான ருதரா
சதிபதி யெல்லாம் ஒண்ணு சேரணும்
சண்டை சச்சரவு இல்லாமே வாழணும்
பக்கத் துணையாக வருவாயம்மா—உன்
மக்களுக்கு புத்தி தருவாயம்மா

**பெண்:** மெய்யா பொய்யா பாருங்கோ—இதை
உணர்ந்து பாருங்கோ மெய்யா பொய்யா
உலகம் பலவிதம் ஐயா— (உலகம்)

விஷயத்தை சொன்னு விஷமா எண்ணுது
வேஷம் போட்டாத்தான் காரியம் நடக்குது
பழமையும் பக்தியும் உதவி செய்யுது
பகவான் பேராலே எல்லாம் பலிக்குது (உலகம்)


நேஷனல்
புரொடக்ஷன்ஸ்
ராஜா
சிவாஜி கணேசன்
ராணி
பத்மினி
கதை, வசனம்
கலைஞர்
மு. கருணாநிதி
டைரக்ஷன்
பீம்சிங்
ஸ்டூடியோ
நியூடோன்
விரைவில்
வருகிறது!